செ. கு. எண்: 120 நாள்: 29.3.12

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**

**அறிக்கை - 29.3.2012**

திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் வட்டம், புளியரம்பாக்கம் கிராமம், செய்யார் - காஞ்சிபுரம் சாலையில் 28.3.2012 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசு பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த செய்யார் வட்டம், வடபூண்டிப்பட்டு காலனியைச் சேர்ந்த திரு. ஆதிகேசவன் என்பவரின் மகன் திரு. துளசி பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தச் சாலை விபத்தில் அகால மரணமடைந்த துளசி அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான திரு. துளசியின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9